**O.S.No.254/2009**

**Date:14.02.2019**

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - சேதுபதி ராஜா, த-பெ.சேது

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

13ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கின் 11ம் பிரதிவாதி மற்றும் 12ம் பிரதிவாதியின் அதிகார முகவர் என்றால் சரிதான். சர்வே எண்.158-1ல் கட்டுப்பட்ட சொத்து வாதிகள் ஈ.எம்.ஜி.எஸ். தர்ம டிரஸ்ட்டுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இந்த தர்ம டிரஸ்ட்டுக்கு பாத்தியமான சொத்தினை விற்பதற்கு டிரஸ்டிகள் நீதிமன்றத்தில் அனுமதி வாங்கிய விபரம் தெரியுமா என்றா்ல தெரியும். அசல் மனு எண்.117-1981ல் மாண்புமிகு மதுரை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி இந்த சொத்துக்கள் கிரையம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட சர்வே எண்.158-1ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 72 செண்டில்தான் 90 செண்டு 12ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து கிரயம் பெற்ற தேதியிலிருந்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் 12ம் பிரதிவாதியின் அனுபவதில் உள்ளது. 12ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாகச் சொல்லும் சொத்திற்கும், ஸ்தலத்தில் வாதிகள் உரிமை கோரும் வழக்கிற்கும் சம்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்ணில் 12ம் பிரதிவாத கிரையம் வாங்கிய சொத்திற்கு வடக்கே உள்ள சொத்துக்களை யார் கிரையம் வாங்கியுள்ளனர் என்று தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சர்வே எண்.158-1ல் 12ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கே உள்ள 45 செண்டு நிலத்தினை 13ம் பிரதிவாதி கிரயைம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 13ம் பிரதிவாதி கிரயம் பெற்ற 45 செண்டிற்கு வடக்கே அவரது சகோதரர் சந்திவீரன் 45 செண்டினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.158-1ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 80 செண்டு நிலத்தினை 12, 13 பிரதிவாதிகளும் 13ம் பிரதிவாதியின் சகோதரரும் கிரையம் பெற்று, அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரிதான். சர்வே எண்.158-1 என்பதுதான் சர்வே எண்.158-1 பார்ட் என்று கிரைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12, 13 பிரதிவாதிகள் மற்றும் 13ம் பிரதிவாதியின் சகோதரரும் உரிமை கோரும் 1 ஏக்கர் 80 செண்டு நிலம் தென்வடலாக உள்ள நத்தம் மதுரை ரோட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கே உள்ளது. இந்த 1 ஏக்கர் 80 செண்டு சொத்து தென்வடலாக அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரிதான்.